18.3.2024

**ஊடக வெளியீடு**

**IR. PATHMANATHAN K.**
தலைமை நிர்வாக அதிகாரி
PBA ஹொல்டிங் பெர்ஹாட் மற்றும் PBAPP.

# நீர் விநியோக எச்சரிக்கை: இந்த வறண்ட பருவத்தில் பினாங்கில் நீர் விநியோக சிக்கல்களைத் தவிர்க்க, குறைவான நீரைப் பயன்படுத்தவும்

- **பினாங்கில் மதிப்பிடப்பட்ட நீர் பயன்பாடு 17.3.2024 அன்று ஒரு நாளைக்கு 927 மில்லியன் லிட்டர் (MLD)-ஐ எட்டியது, இது 2023 இல் சராசரியாக 877 MLD-ஆக இருந்தது.**

- **PBAPP முடிந்தவரை நீரை உற்பத்தி செய்கிறது, இருப்பினும் இந்த 50 MLD பயன்பாட்டு அதிகரிப்பினால் சில பகுதிகளில் நீர் விநியோகத்தில் சிக்கல்களை ஏற்படுத்துகிறது.**

பினாங்கு, திங்கட்கிழமை, 18.3.2024: பினாங்கு நீர் பயனீட்டாளர்கள் தங்கள் நீர் பயன்பாட்டை உடனடியாக 10% குறைக்குமாறு PBAPP வேண்டுகோள் விடுக்கிறது.

உங்கள் தோட்டங்களுக்குத் தண்ணீர் ஊற்றுவதற்கும், உங்கள் வாகனங்கள் அல்லது வளாகங்களை உடனடியாக சுத்தம் செய்வதற்கும் நீர் குழாய்களைப் பயன்படுத்துவதை தயவுசெய்து தவிர்க்கவும். தயவு செய்து வீட்டிலும் வேலைச் செய்யும் இடங்களிலும் நீரை சிக்கனமாகப் பயன்படுத்தவும்.

**927 MLD நீர் பயன்பாடு**

ஞாயிற்றுக்கிழமை (17.3.2024), பினாங்கில் நீர் பயன்பாடு 2023 இல் பதிவு செய்யப்பட்ட தினசரி சராசரியான 877 MLD உடன் ஒப்பிடும்போது, ஒரு நாளைக்கு 927 மில்லியன் லிட்டர் (MLD) என பயன்பாட்டில் உயர்வை எட்டியுள்ளதாகப் பதிவு செய்யப்படுகிறது.

இது ஓர் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நீர்ப் பயன்பாடு திடீரென 50 MLD அதிகரிப்பைக் காண்டுகிறது

தயவு செய்து என்னை தெளிவுப்படுத்த அனுமதிக்கவும்: 50 MLD என்பது ஒரு நாளைக்கு 20 ஒலிம்பிக் அளவிலான நீச்சல் குளங்கள் அல்லது 33,333,333 பெரிய (1.5L) குடிநீர் பாட்டில்களை தினமும் நிரப்பக்கூடிய நீரின் அளவைக் குறிக்கிறது.

நீர் அழுத்தத்தில் இத்தகைய அதிகரிப்பானது சிக்கனம் அல்லது நிலையானது அல்ல. 16.3.2024 தேதியில் அதன் FB பதிவில் PBAPP தெரிவித்தப்படி, தென்மேற்கு மாவட்டம் (Daerah Barat Daya) மற்றும் தெற்கு செபராங் பிறை மாவட்டத்தின் (Seberang Perai Selatan) சில பகுதிகளில் இது நீர் சிக்கல்களை ஏற்படுத்துகிறது.

பின்வரும் 'ballpark' நீர் விநியோக பொறியியல் தரவு 17.3.2024 அன்று பினாங்கு எதிர்நோக்கும் சூழ்நிலையை கோடிட்டுக் காட்டுகிறது:

| | | |
|---|---|---|
| 1. | PBAPP இன் சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி<br>• மொத்தம் 9 நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (WTPs):பினாங்கு தீவு மற்றும் செபராங் பிறை | 1266.3 MLD<br>(2023 சராசரி: 1198 MLD) |

| | | |
|---|---|---|
| 2. | சராசரி நீர் இழப்பு (NRW) 2023 | 26.8% |
| 3. | மதிப்பிடப்பட்ட மொத்த மாநில நீர்ப் பயன்பாடு<br>(1266.3 MLD - 26.8%) | 927 MLD<br>(2023 சராசரி: 877 MLD) |
| 4. | மதிப்பிடப்பட்ட பயன்பாடு: பினாங்கு தீவு<br>(2023 தரவுகளின் அடிப்படையில் மொத்தப் பயன்பாடு 42.7%) | 396 MLD |
| 5. | மதிப்பிடப்பட்ட பயன்பாடு: செபராங் பிறை<br>(2023 தரவுகளின் அடிப்படையில் மொத்தப் பயன்பாட்டில் 57.3%) | 531 MLD |

**சுங்கை மூடா ஆற்றின் நீர் மட்டம் குறைவு**

14.3.2024 - 17.3.2024 வரையிலான காலக்கெடுவில், சுங்கை மூடாவின் ஆற்றின் மட்டம் 1.71 மீ - 1.89 மீ ஆக இருந்தது, இது செபராங் பிறையில் உள்ள லஹர் தியாங் 'இன்டேக்கில்' நீரை உறிஞ்சுவதற்கான "2.0 மீ பாதுகாப்பான மட்டத்திற்கு" கீழே உள்ளது.

கெடாவில் உள்ள 120 பில்லியன் லிட்டர் கொண்ட மூடா அணையின் நீர்மட்டம் 15.3.2024 அன்று 48.6% ஆகக் குறைந்துள்ளது. அதிர்ஷ்டவசமாக, சுங்கை மூடாவிற்கு நீர் வழங்கக்கூடிய இரண்டாவது அணையான பெரிஸ் அணையின் மட்டம் ஒரே நாளில் 98.6% ஆக இருந்தது.

PBAPP பினாங்கின் நீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக சுங்கை மூடாவிலிருந்து தினமும் முடிந்த அளவு மூல நீரை உறிஞ்சி

வருகிறது. இருப்பினும், வறண்ட காலங்களில் மூடா அணை மற்றும் பெரிஸ் அணையில் இருந்து சுங்கை மூடாவிற்கு நீர் விடுவதற்கான நடவடிக்கைகள் கெடா மாநில அதிகாரத்திற்கு உட்பட்டது.

ஆயினும்கூட, சுங்கை மூடாவிலிருந்து போதுமான நீரை எடுக்க முடியாத நிலையில், விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையிலிருந்து (EMD) அதிகபட்சமாக 600 MLD வரை எடுக்க PBAPP பணியாளர்கள் தயாராக உள்ளனர்.

**அணை அறிக்கை**

17.3.2024 நிலவரப்படி, பினாங்கின் 3 முக்கிய அணைகளின் பயனுள்ள கொள்ளளவு பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | ஆயிர் ஈத்தாம் அணை | 37.3% |
| 2. | தெலுக் பஹாங் அணை | 73.0% |
| 3. | விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை | 89.6% |

15.3.2024 அன்று 38.1% ஆக இருந்த ஆயிர் ஈத்தாம் அணையின் கொள்ளளவு 0.8% குறைந்து 17.3.2024 இல் 37.3% ஆக உள்ளது என்பதை நினைவில் கொள்ளவும். PBAPP அணையில் இருந்து 11MLD மேல் நீரை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதிகரித்துள்ள நீர் தேவையை பூர்த்திச் செய்ய ஆயிர் ஈத்தாம் WTP-இல் 25 MLD சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது.

கடந்த 5.2.2024 முதல், PBAPP இன் Air Itam Dam Action Plan 2024 (AIIDAP 2024) செயல்படுத்தப்பட்டதன் மூலம் அணையின் செயல்திறன் கொள்ளளவு 4.5% அதிகரித்துள்ளது, 5.2.2024 அன்று 32.8% ஆக இருந்த அணையின் திறன் 17.3.2024 அன்று 37.3% ஆக குறைந்துள்ளது.

AIDAP 2024 இன் தொடர்ச்சியான வெற்றியைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்று மிதமான நீர் பயன்பாடு ஆகும். அணையின் பயனுள்ள கொள்ளளவை படிப்படியாக அதிகரிக்க PBAPP சுங்கை டுவா WTP இலிருந்து 33 MLD நீரை ஆயிர் ஈத்தாம் நீர் விநியோக சேவை பகுதிக்கு செலுத்துகிறது என்பதை நினைவில் கொள்ளவும்.

இருப்பினும், வழக்கத்திற்கு மாறாக அதிகமான நீர் பயன்பாடு காரணமாக, PBAPP 33MLD சுத்திகரிக்கப்பட்ட நீரை செபராங் பிறையிலிருந்து ஆயிர் ஈத்தாமிற்கு தொடர்ந்து செலுத்த முடியவில்லை என்றால், AIDAP 2024 திட்டம் பயனளிக்காது.

எனவே, இந்த வறட்சி காலத்தில் பினாங்கில் நீரை குறைவாக பயன்படுத்தவும். கெடாவில் உள்ள அணைகள் மற்றும் மூடா அணையில் மழை பொழியும் வரை எங்கள் நீர் விநியோகம் "பாதுகாப்பானது அல்ல".

நீர் சேமிப்பு குறிப்புகளுக்கு, www.pba.com.my அகப்பக்கத்தை பார்வையிடவும்.

நன்றி.

---

எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Unit
மின்னஞ்சல்: syarifah@pba.com.my